42

மறைசையந்தாதி.

உ

கணபதிதுணை.

மறைசையந்தாதி.

யாழ்ப்பாணத்து

நல்லூர்

ஸ்ரீ. வி. சின்னத்தம்பிப்புலவரவர்கள்

அருளிச்செய்தது.

இது

யாழ்ப்பாணம்.

க. வேற்பிள்ளையரால்

தமது

விவேகாநந்தயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

கலி. ௫00௪ சுபகிருது௵ மாசி௴.

1903.

உ

கணபதிதுணை.

மறைசையந்தாதி.

காப்பு.

அந்தமு மாதியு மில்லா மறைசையி லத்தர்தம்மேற்
செந்தமிழ் நூற்பொரு ளந்தாதி பாடச்சிலம்பிலன்னை
யிந்தன வாணுதற் சுந்தரி யம்பிகை யீன்றெடுத்த
சுந்தர வீரகத் திச்சே தகன்றாட் டுணைதுணையே.

திருவா ரணங்கு மணமகன் பூசித்த செல்வர் வெள்ளைக்
கருவா ரணங்கு மிரும்பண்ணை சூழ்மறைக் காடரிசை
மருவா ரணங்கு திரையாரைப் பாடுமென் வாய்க்கவிதைக்
கிருவா ரணங்குசெய் பூண்முலைப் பாமயி லென்றுணையே. ௧

என்றா டலையொன்று காலனைத் தாக்கி யெழிற்கனக
மன்றா டலைச்செய்து வான்பரவைப்பெயர் மண்ணும் விண்ணுஞ்
சென்றா டலைக்கடை வாயிற்படியினுஞ் சேர்ந் துவைகு
முன்றா டலைவைப் பதுமறைக் காட்டி லுறைபரனே. ௨

பரமரம் பாலிகைச் செம்பவ ளக்கொடி பங்கர்சுரும்
பரமரம் பானை யெரித்தார் மறைசைப் பதியர்வரிப்
பிரமரம் பாடிய பொற்கொன்றைத் தாமரைப் பேசுதியோர்
தரமரம் பாவிநெஞ் சேவினை யாங்கருந் தாதினுக்கே. ௩

கருந்தாதை யன்ன கயவர்தம் மீதிற் கவிதைசொல்லி
வருந்தாதை யானனன் வேதா ரணியன்வை வேற்குகனைத்
தருந்தாதை தெய்வ மணங்கமழ் சேவடித் தாமரைமேற்
பொருந்தாதை யோநினைவில்லா வென்சித்தப் பொறிச்சுரும்பே.

சுரும்பர வைக்கிசை தாமரை யோபெருந் தொல்புவியோ
கரும்பர வைக்கண் ணிபலேது தூதிருட் காலமுல்லை
பரும்பர வைப்பயி லும்வா ணகையல்கு லன்னமென்ன
வரும்பர வைக்கு நடந்தார் மறைசை வரையிறையே. ௫

வரைச்சங் கரிக்கு மணவாளர் கூடல் வளர்ந்திடுமூ
வுரைச்சங் கரிக்கு வனஞ்சூழ் மறைசையி லுத்தமநா
தரைச்சங் கரிக்கு விடப்பாணிச் சக்கரத் தாளைதொட்ட
திரைச்சங் கரிக்குந் தெரியாப் பதநிழல் சேர்மின்களே. ௬

மின்னஞ்ச கங்கைச் சடாதரன் சத்த விடங்கன்றிரை
வன்னஞ் சுகந்தவன் மாமறைக் காடற்கு மாதொரிராப்
பன்னஞ் சுகமென வேள்காம காண்டப் பகழியினு
மின்னஞ் சுகமில்லை யென்றத்தையோது மிளந்தத்தையே. ௭

தத்தலை வேலையன் காணாத வேதத் தனிவனத்து
மூத்தலை வேலையன் வெற்பினம் மாது முளரியடி
யத்தலை வேலையன் மூட்சொரி பாலை யருஞ்சுரத்து
வைத்தலை வேலையன் பாலென்னை நாடி வரவெண்ணுமே. ௮

வரபர சங்கர வேதா ரணிய மடங்கலஞ்சுஞ்
சரபர சங்கர ளம்பொதி வாய்விழித் தையல்பங்கி
னரபர சங்க ரவிபோ லொளியி னணிதிகழும்
புரபர சங்கர வாகம ஞர்வரும் போதத்திலே. ௯

போத வனத்த நவிராழி விற்கதை பூட்டுசிலை
மாத வனத்தன் மனுதிக்கெட் டாத வரதனங்கி
யாத வனத்த நகுமதி மூன்றுக ணன்பொழியார்
வேத வனத்தன் பதம்பேணிற் பாச விலங்கறுமே. ௧௦

விலங்க லரிக்குலஞ் சூழ்மறைக் காடன் விரிந்ததுழா
யலங்க லரிக்கரு மாரூரி லேர்புற் றமர்ந்திருக்கு
மிலங்க லரிக்கட் களக்கறை யானைசசற் றெண்ணுநெஞ்சே
கலங்க லரிக்குநந் தீவினை யான கருங்கலையே. ௧௧

கருங்கலை மானுமென் சித்தா சனம்புகுங் கண்ணுதலோ
னருங்கலை மானுறை வேதா ரணிய னணிவரை மேன்
மருங்கலை மாநுதிக் கண்முலை யிருங்கள் வார்தடங்கண்
பொருங்கலை மானென்று வந்ததுண் டாகிற் புகன்றிடுமே. ௧௨

புகரானை யீரு முரியானை வெண்பொருப் பானையெண்ணம்
பகரானை மெய்த்து வெண்பற்றானை யாற்கைப் பகட்டைக்கவ்வி
யகரானை யச்சுட ராழிதொட் டாற்கரி யானைமறை
நகரானை யன்றிச் சொலாதிறைஞ்சாதென்ற னுச்சிரமே. ௧௩

சிரவர விந்தம்புனைமறைக் காடத்ரி சூலங்கொண்ட
கரவர விந்தம் பணித்தோன் மலைத்தென்றற் கன்றுயிர்க
வரவர விந்த மடநடைக் கோமள வஞ்சியிரு
விரவர விந்த மெனக்கிடந் தாள்பின்னை யென்செய்வளே. ௧௪

செய்யரைக் கோடியன் மாவுரி யாரைச் செழுங்கனன்மான்
கையரைக் கோடி புனைமறைக் காடரைக் கண்ணிற்கண்டாற்
பையரைக் கோடிமின் னார்மய லால்வரும் பாவமெல்லா
மையரைக் கோடி யருந்துக ளாகு மறிசித்தமே. ௧௫

சித்திர வன்னி கருங் கொங்கை பங்கர்செற் றார்புரமூன்
றத்திர வன்னிக் கருணைகை யார்க்கிட மாகமதூன்
மித்திர வன்னியும் பூவையுங் கேட்டு வியந்துரைக்கும்
பத்திர வன்னி மரஞ்சேர் மறைசைப் பதியகமே. கசு

பதிகம் பரிக்குங் குழன்மாத ராயப் பரவையுள்ளே
வதிகம் பரிக்கு நிகர்விழி யாய்மலை மாதுகங்கா
ளிதிகம் பரிக்கு மணியாக மீந்தரு ளீசர்முத்தம்
பொதிகம் பரிக்குந் திரைவேலை வேத புரிவரைக்கே. கஎ

புரியா ரனந்த னறியாப் பதம்பெறப் பொற்கயிலைப்
பெரியா ரனந்தனை வென்னடை பாகர் பிறப்பினிலங்
குரியா ரனந்த வளமறைக் காட்டைக் குறித்திருந்து
மரியா ரனந்தன் சிரமேற் புவித்தல மானவரே. கஅ

மானத் தரக்கரந் தைப்பட வீர்த்துரி வாங்கினர்கற்
றூனத் தரக்க ரரசுட்க வூன்றிய தாளர்குடப்
பானத் தரக்கர விந்தத்தின் மேற்றுயில் பண்ணைமறைக்
கானத் தரக்கர மைந்துணர் வீர்வினைக் கட்டறுமே. கசூ

அறுத்தவித் தாரச் சமைத்தபின் ளைக்குகந் தார்பொதியக்
குறுத்தவித் தார முனிக்கருள் கோலக் குழகராராப்
பொறுத்த வித்தார ணியேத்தா ரணபுரம் போந்துகரு
வறுத்த வித்தாக்குவ தல்லாது வேறு மருந்தில்லையே. உ0

மருக்கர வீரநின் ஞெகிழியைக் காரென்று மஞ்ஞையெல்லா
முருக்கர வீர வயில்விழி யாய்நட முற்றனவைந்
திருக்கர வீரகத் திச்சை தகன்றந்தை சீர்மறைசை
யெருக்கர வீர மதிவேணி வெற்பி னெழிலியன்றே. உக

அன்றுலி னோட்டந் துயின்றோ னிகரண்ண லேதிருமான்
பொன்றுலி நாட்டநஞ் சுண்டார்மறைசைப் பொருப்பகத்தி [ர்
லொன்றுலி நாட்டவழ் கார்போலும் வார்குழலொண்டொடிபூ
குன்றுலி நாட்டவர் கொள்ளா ருனது குளிர்முத்தமே. உஉ

முத்திரு மாதங்க வார்முலை பாகர் முதுமறைசை
மெய்த்திரு மாதங்க மாற்கரி யாரை விளம்புகிலீர்
பத்திரு மாதங் கருவயி னூறிய பாழூடம்பை
வைத்திரு மாதங்கத் தென்றிசைக் கூற்று வருங்கடைக்கே.

வருகர நாகமகவான் பதமும் வனசப்பிரான்
பொருகர னகம் பிளந்தான் பதமும் புகலின்மிக்கோ
முருகர நாகர் டணிமா முகரத்தன் மூவர்தமிழ்க்
குருகர னக மருங்குழை யாற்பணி யொண்டவர்க்கே. உச

ஒண்டுறை யுண்புற வீர்மறந் தாரெம தூரார்முன்னாண்
மண்டுறை யாக்கிய சோறீந் திடமகிழ்ந் தார்வரம்பி
னண்டுறை யால்வெயில் காய்மறைக் காட்டுறை நாகமணி
வண்டுறை யோதிக்குச் செம்பாதி யாதி மணிவரைக்கே. ௨௫

மணிக்குட நாடகன் மாறன் பதாகை வரித்தறுதற்
கணிக்குட னாடக வாழுமென் றுலிம்மை காயுமையற்
பிணிக்குட னாடகப் பொற்கொன்றை வாங்கும் பெருமறைசை
யணிக்குட னாடக மால்பணி யாதி யரனிடத்தே. ௨௬

இடங்கா டக்கய் மேனின்று கூப்பிட் டிரங்குமந்தத்
தடங்கா டக்கயங் காத்தோன் சரமனைத் தையல்கன்ம
கடங்கா டக்கய மேருகு நான்மறைக் கான்புவனி
விடங்கா டக்கய நீர்போ லெனைமுத்தி மேல்வைப்பரே. ௨௭

மேல்விண்டு நாயக வில்லார் மறைசை விமலரிடப்
பால்விண்டு வேதன் வலப்பாலு மாகப் படைத்தவர்வா
யால்விண்டு நானிரை சுற்றுஞ் சிலம்பிக் கரசளித்த (லுமே
போல்விண்டு முத்தருங் கொள்வாரென் னூற்கவிப் புன்சொல்

புன்னாக வேலி மறைக்காட ரன்பரைப் புண்டரிக
மின்னாக மாயவ னான்முகன் வாசவன் மேற்பதிக்கு
மன்னாக வைப்பவர் காடோடு மாடு மகிழ்ந்துபுன்றோல்
பன்னாக நஞ்சுடை பூணூண தாகப் படைத்தவரே. ௨௯

படைக்கந் தரத்தர் திருமறைக் காடர் பனிவரைமே
லடைக்கந் தரத்த நிறத்தா மரைமுகத் தன்னமன்னா
டொடைக்கந் தரத்த மருஞ்சுரு ளோதிச் சுரும்பினங்கா
ளிடைக்கந் தரம்வரி னுங்களுக் கேபழி யேற்றிடுமே. ௩௦

ஏற்றுக் கொடியர் திருமறைக் கானத்த ரேழுலகப் [டேன்
பேற்றுக் கொடியத்தர் திக்காடை நாதரைப் பேணிக்கொண்
கூற்றுக் கொடியற்கு மஞ்சே னினியிக் குவலயத்தே
தோற்றுக் கொடிவரை கேதன மாதுந் தொலைந்தனளே. ௩௧

தொலைவே தனையர் கருக்குழி வாய்ப்படுந் தொல்லைச்சென்ம
நிலைவே தனையென் றுழலூசல் போல நினையுநெஞ்சி
னலைவே தனைய வொருகாலஞ்சேலென் றுரைக்கினென்னாங்
கலைவே னையேன் பணிமறைக் காடவென் கண்முனின்றே. ௩௨

கண்ணச் சிரக வரிசூழுங் காமறைக் காடர்செந்தீ
வண்ணச் சிராசல மேருவில் லாளி வரைவிடுதே
னுண்ணச் சிராக விழிக்கால வேலுறை விட்டுவிட்டுப்
பெண்ணச் சிராவல வாவிறங் காது பிடியன்னமே. ௩௩

அன்னம் பலவ நறும்புன்னைச் சேக்கை யமர்மறைசை
முன்னம் பலவன் முடித்த சடாதர மூர்த்திதில்லைப்
பொன்னம் பலவன் பிஞகங் காளன் புராந்தகன்சீர்
வன்னம் பலவன் பசுபதி நாதனென் வான்றுணையே. ௧௪

வானப் பிறையையும் வாடைப் புலியையு மையல்செய்யுந்
தேனப் பிறையையுந் தென்றலை யுங்கண்டு சில்லரிக்கண்
மீனப் பிறைக்கு மடமானை மேவிலர் வேடனிடு
மூனப் பிறைச்சிக் குகந்தார் மறைசை யுகந்தவரே. ௧௫

உகந்தா வடிக்கு மிடையர்தம் பாலளை யுண்டுகடற்
சகந்தா வடியனுக் கெட்டாத ஞான தலத்து முத்திச்
சுகந்தர் வடிதமிழ் நான்மறைக் காட துணைவரியம்
பகந்தா வடிசெல் குழையாண் மருவிய பாகத்தனே. ௧௬

பாக னகனி மொழியா யுனது பனிமுகமாங்
கோக னகமில வுந்துணைப் பானலிற் கோடல்கண்டே
ஞாக நகநிமி ரும்புலிப் பாதரு நாடவன்று
மாக னகநிலை மன்றுடி வேத வனமலைக்கே. ௧௭

மலைக்கார் முகந்தர யாழைப் பழிமொழி மான்குறையா
நிலைக்கார் முகமதி யாழ்பங்க னோநிறை காய்க்கந்திச்சு
ழலைக்கார் முகந்திடும் வேதா ரணிய வருந்துயரந்
தொலைக்கார் முகந்தமி யேன்சொல்லு வேனென்ன சொன்னதி [லே.

சொன்னச்சிலம்பு குழைத்தவில் லான்சுரு திப்பதியான்
வன்னச் சிலம்பிக் கரசளித் தான்வெற்பின் மாணிழைகண்
மின்னச் சிலம்பு சலநனை யாமன்மெய் வேர்வரும்பச்
சின்னச் சிலம்படி யாய்குடைந் தாயொரு தேன்சுனையே. ௧௯

தேன்றதும் பிக்குளிர் தாமரைப் பீடிகைச் செல்வனும்வாய்
நான்றதும் பிக்கருண் மாயனும் வான்புவி நண்ணியதுங்
கீன்றதும் பித்தவ ராற்கிட்டு மோகிடை யாவுலக
மீன்றதும் பிக்குழல் சேர்மறைக் காடனிரண்டையுமே. ௨0

இரண்டந் தகரங் கிருந்தன்ன பார்வையிணைச்சுரும்பார்
புரண்டந் தகர மளவிய கோதையைப் பொன்னில்வைத்தார்
முரண்டந் தகரவை வேலர் கடற்றிரை முத்தச்சங்கங்
குரண்டந் தகர வெறிமறைக் காடன் குளிர்கிரிக்கே. ௨௧

கிரிதா ரகையணிந் தாலென்ன முத்தங் கிடந்தகொங்கை
யரிதார டன்னவ ளம்பகங் காட்டு மருக்கண்மதி
யெரிதார வெற்பு விழியாசனத்த னெழின்மறைசை
விரிதா ரகப்பொரு ளானேறுகந்தவன் மெய்யொளியே. ௨௨

மெய்த்துத் தியான பணியா பரணன் விரைமருவுங் [ப்
கொத்துத் தியானஞ் செறிமறைக் காட்டுறை கோனையெண்ணி
பொய்த்துத் தியானம் புறுசெருக் கற்றுப் புலனடங்க
வைத்துத் தியானசமாதிசெய் வார்க்கில்லை வன்பிறப்பே. ௪௩

வன்போதகவல் லியநெடுங் கான்சென்று மார்புடம்பி
னென்போ தகவல் லியமா தவம்புரிந் தேனிளைப்பிர்
பொன்போ தகவல்லி யன்பார் சுருதி புரத்தபத்த
ரன்போ தகவல்லி யங்கொன்றை யாயென் றறைந்திடுமே. ௪௪

அறைக்கண் டவழரு விக்கிரி வேத வனத்தண்ணினே
மறைக்கண் டரிய பிரானிறந் தாரைப் பொன் மானத்துய்த்துப்
பிறைக்கண்ட வேணியிற் பாணியும் பாணியிற் பேர்மழுவுங்
கறைக்கண்ட முந்தரச் செல்லுதல் பார்த்தி கருங்குழலே. ௪௫

கருமந் திரிகரணம்வேறு மாறு கயவர்ப்பற்றித்
தருமந் திரியு மெனையாள்வை யோவெற்றித் தானவர்தம்
பெருமந் திரியை யுதாத்தில் வைத்த பிரானளகை
யொருமந் திரிநண்பனே மறைக் காட்டுறை யுத்தமனே. ௪௬

உத்தம ரத்தி யுரியார் மறைசை யொருத்தர் வெள்ளோ
லத்தம ரத்தி னிறைகங்கை வேணிய ராலெரிந்த
நத்தம ரத்தி முராசான் செழுங்கனை நல்கமுன்னுள்
வைத்தம ரத்தின் மெய்த் தூரில்வெந் நீர்விடு மங்கையரே. ௪௭

மங்கல மந்தர முன்னுத நின்கண்ட வண்ணங்கண்டு
சங்கல மந்தர வங்கொண்டு கூனிச் சுரிமுகஞ்சார்ங்
திங்கல மந்தர மத்தான் கையிற்புக் கிருந்தது நா
கங்கல மந்தர தம்புவி யான்மறைக் கானமின்னே. ௪௮

கானவண் டானக் களிற்றைவர்க் காகக் கழுவிற்றங்கு
மானவண் டானது காணுத தாமரை யானுஞ்செவ்வி
ஞானவண் டானத் துறைவோனும் வாவியி னுடிக்கொத்து
மீனவண் டானந் திரிமறைக் காட்டுறை வித்தகனே. ௪௯

வித்தந் தியாக முதவா வுலோபர்க்கு வீணிற்சொற்பாட்
டைத்தந் தியாக பதியென்ப ரான்முத லாம்பிள்ளையை
மைத்தந் தியாகப் பெறுமறைக் காடர் வயங்குமுண்மைச்
சித்தந் தியாக தியாகரைப் பாடிலர் தீங்கறவே. ௫௰

தீங்கரும் பாரஞ் சொரிவயல் வேதத் திருவனத்துக்
கோங்கரும் பார மணிமுலைச் சாமளக் கோமளப்பெண்
பாங்கரும் பாரண சூலாயு தாவிப் படிவச்சுமை
தாங்கரும் பார மினிப்பிற வாமுத்தி தந்தருளே. ௫௧

தந்தம் படைத்த களிறென்று தாக்கத் தனிபுரந்து
நுந்தம் படைத்தலை வேல்விழிக் கன்னியை நோக்கியதா
னந்தம் படைத்தலைச்சால்வழி யூர்ந்திடு நான்மறைசை
யிந்தம் படைத்த சடையான்வெற் பாடவரெண்சிங்கமே. ருஉ

சிங்க முருக்குவன் றென்கால னுவியைச் செப்பிலின்னே
கங்க முருக்குரா னுய்விருந் துண்ணக் கனத்திடுமென்
னங்க முருக்கும் பிணியங்கு மிங்கு மலையவைத்தாய்
பங்க முருக்கிதழ் சேர்மறைக் காட்டுறை பண்ணவனே. ருந

பண்ண முதலையின் சொல்லிபங் காளன் பகைவிடம்வன்
கண்ண முதலையி னேமியை யேவிய கண்ணனுயி
ருண்ண முதலையின் றென்மறைக் காடனை யுண்டென்பதே
யெண்ண முதலையின் கானிடைப்பூவி லினிநெஞ்சமே. ருச

நெஞ்சத் திருக்கு மதிநீயைம் பூத நிலையமுநீ
கஞ்சத் திருக்கு மரிசேருங் கண்ணனெண் கண்ணனுநீ
வஞ்சத் திருக்கு மலமாயை நீங்கிய மாதவத்தோர்
தஞ்சத் திருக்கு வனத்துறை காரண தற்பரனே. ருரு

தற்கோல மென்ற களிவாயை வேட்டுத் தயங்குமணிப்
பொற்கோல மென்றடி யேன்காண் குவன்புவி புக்கிடந்த
முற்கோல மென்ற விசம்புயன் போகி முதலமரர்
நிற்கோல மென்ற பொழுதால முண்ட நிருமலனே. ருசா

நிருமலரஞ்சனை சேய்பணி மாலத்தர் நீள்விசயற்
பொருமல ரஞ்ச நயந்திடும் வேத புரிவரைக்கோன்
மருமல ரஞ்சனை யன்னார் மருர்சொல் வருவர்வன்கண்
ணருமல ரஞ்சனை யாதொழி யாய்மதி யாய்மனமே. ருஎ

மனக்காக்கை மூவர் தமிழ்க்குயில் வாணியை வைத்தகுழை
யுனக்காக்கை வஞ்சவினையேன்புன் னுவி னுரைத்த தமிழ்
சினக்காக்கைவாயினு றுங்குரற் சொல்லொக்குஞ்சேண்முகிற்சந்
தனக்காக்கை நீட்டு மறைக்காட்டில் வாழ்சிவசம்பரனே. ருஅ

சம்பாதி யந்தச் சடாயுவும் போற்றுந் தலைவன்புரம்
வெம்பாதி யந்த மிலாமறைக் காடன் விரைக்குழல்சேர்
செம்பாதி யந்தண் சமயமல் லாது திரிநெஞ்சமே
நம்பாதி யந்தகர் பொல்லாச் சமயங்க ணன்றெனவே. ருசு

நன்றென் புலமைந்தில் வாயொன்று மேகவை யாயினுஞ்சீர்
நின்றென் புலவு கறையாக்கை துஞ்சுமுன் னீள்பொதியக்
குன்றென் புலவர்முன் னோர்கவி யாயினுங் கூறியதால்
வன்றென் புலவனைத் தாக்கிய வேத வனத்தனையே. சாo

வனக்கோதை யேயு மருகா றுவைத்துவண் டேன்பிழிந்த
கனக்கோதை யேனளித் தீர்க்கரும் பாட்டிய கட்டிநல்கா
தெனக்கோதை வாரித்திருவே மதிமலி யென்றமிழ்விற்
பனக்கோதை பால்விடுத் தான்மறைக் காட்டன் பனிவரைக்கே.

புனிச்சந் திரனணி வேணியுந் தாங்குஞ்செம் பஞ்சினுட்
னிச்சந் திரளன்னத் தூவியிற் சேக்குமஞ் சீறடிபாற்
றனிச்சந் திரவி னடந்தான் சிகா தளம்பொலிமே
தினிச்சந் திரவரை வில்லான் மறைசையிற் செந்துருவே. ௰௨

உருப்பவ னுசன வாய்த்தேரை யிற்பிணிக் குள்ளுடைந்தேன்
கருப்பவ நாச நதிமணி கன்னிகைக் கான்மறைசை
நெருப்பவ் னுசன காதிபர் தேசிக நீள்பதுமத்
திருப்பவ னுசனப் பாற்கட லரன்பணிந் தேத்திறையே. ௰௩

ஏத்திரப் பாண்டி யெனவைய மேற்கு மிறைவன்மதிக்
கோத்திரப் பாண்டிய னுகிமண் ணுண்டவன் கோலநரைக்
காத்திரப் பாண்டின் மறைக்கா டனைமல காயமென்னுஞ்
சூத்திரப் பாண்டி லிறுமிறுங் காணுந் தொழுமுன்னமே. ௰௪

முன்னுவ லாரிசை யுங்கூடற் சங்கர் முதியவெள்ளை
நன்னுவ லாரியன் மாமறைக் காடர் நயங்கொள் பச்சை
மின்னுவ லாரிவ ரைக்காண வேண்டும் விழிசதப்பத்
தென்னு வலாரிபடைத்தா னவையு மிமைப்பிலவே. ௰௫

இமையாத வம்பகர் சூழ்மறைக் கானத் திறைவ கங்கைச்
சுமையாத வம்பக வன்செயச் சென்னி துளக்கரனே
கமையாத வம்பகல் வீசிய வாரிதிக் காசினியோ
ருமையா தவம்பக ரார்வேட னெச்சிலை யுண்டதற்கே. ௰௬

உண்டலத் தானையன் பின்வந்த வண்டின முசுந்துழாய்க்
கொண்டலத் தானைய நஞ்சுடர் மூன்றையுங் கொண்டமுக
மண்டலத் தானையன் கொண்டாடும் வேத வனத்தன்சிறு
கண்டலத் தானையன் றீருரி வாங்குங் கருணையெற்கே. ௰௭

எற்பதங் கன்று வளர்சோம னங்கி யிவர்செய்கையாய்
நிற்பதங் கன்று திருமறைக் காடனிறை வைகுந்த
நற்பதங் கன்று நிரைமேய்த் தவற்கரு ளுதன்பெண்பாற்
சிற்பதங் கன்று மெனச்சென்ற தூதன் செயல்வண்ணமே. ௰௮

வண்ணவெண் கண்ணன் மரையா ளுறை மறைக் காட்டிறைவர்
திண்ணவெண் கண்ணன் மதமாத் திரியுஞ் சிலம்பகம்பூ
வுண்ணவெண் கண்ண னணையே நிதம்ப் முயர்சுருதிப்
பண்ணவெண் கண்ணன் மனையே முகநண்ப பைந்தொடிக்கே.

தொடிப்பாணி நித்திரை யாகாளென் காதிற் றுலைக்குமட்டோ
நொடிப்பாணி னித்தில தென்னும் விழுமழு நோமிப்பிவாய்
வெடிப்பாணி நித்தில மையோ சுடுமெனும் வேதவன
முடிப்பாணி நித்தியப் பெய்மான் பவனி முறையிற்கண்டே. ௭0

கண்டங் கடுத்தவி ராமாலை வேதன் கழிந்ததலை
முண்டங் கடுத்த மிசைந்திடும் வானின் முளைத்தபிறைத்
துண்டங் கடுத்த நுதலிம யாசலத் துய்யபச்சைப்
பெண்டங் கடுத்தது பார்மறைக் காட்டுறை பேரொளிக்கே. ௭௧

ஒளியா னிறையுந் திவாகரக் கண்ண னுலகத்துயி
ரளியா நிறையுந்தி யம்புயன் வேதற் கருஞ்சின்மய
வெளியா னிறையுந்தி முந்நீர் மறைசையில வெற்பணங்கே
தெளியா னிறையுந் திகைத்தங் கிரேன்வந்து சேருவனே. ௭௨

சேரு வரிக்கடை யாளமில் லாவுருச் சித்தசர்போ
லாரு வரிக்கடை யேநிற்ப ராலணங் கேசெழும்பூந்
தாரு வரிக்கடை பண்பாடும் வேதத் தலத்திறைமுந்
நீரு வரிக்கடை வெங்காள போசன னீண்மலைக்கே. ௭௩

நீண்ட வராக மலைமா நிலங்கிண்டி நின்றறியா
னாண்ட வராக மலைகுனித் தான்மறை நற்பதியான்
மாண்ட வராக மலையாமல் வைப்பவன் வான்புகழை
வேண்ட வராக மலைக்குமுன் றேன்றும் வெறுந்தெளவையே.

வெறும்பத்தி நிச்சயமில்லேனை யாட்கொண்டு வீட்டில்வைப்
புறும்பத்தி னிற்பத்து மாமகள் மாலய னும்பருக்கு (பா
மெறும்பத்தி நிற்கும் கடைமுத லாவி யெவைக்குமருள்
பெறும்பத் தினிபங்க னேமறைக் கானப் பெருஞ்சுடரே. ௭௫

பெருங்காசி னித்தலங் கொண்டாடி யாடிப் பிறங்குகங்கை
யருங்காசி நித்த முறைவோர் மறைசை யமலர் வெற்பின்
மருங்காசி னித்தலை கொள்ள விடாதென்ன மார்பகத்தே
பருங்காசி னித்தகைப் பூண்கொங்கை மங்கைக்குப் பாரித்ததே.

பாரிக்கு மார முலையுமை யாட்கும் பகிரதியா
நாரிக்கு மாரப் புரமுஞ் சிரமு நயந்தளித்தான்
மூரிக்கு மாரனைத் தந்தான் மறைசையின் மூர்த்திதந்தான்
றூரிக்கு மாரனுக் கில்லையென் மேற்பகை சாதிப்பதே. ௭௭

சாதிப்ப ராகம மென்பயன் வேட்டுவன் சாதிப்புழு
வேதிப்ப ராகம் பெறல்போல மெய்க்குரு வாற்பெற்றியான்
பூதிப்ப ராக மணிந்தன்ப னுவதெப் போதருளா
யாதிப்ப ராகவி னுன்மறைக் கானத்தெ னம்புயனே. ௭௮

புயற்கூடு போம்பொழில் வேதா ரணியன்பொன் னாட்டகத்தே
மயற்கூடு மாடவர் நாரிய ராருயிர் வாரியுண்ணு
முயற்கூடு தாக்க விறற்கூ டுடையு முடிச்சிலம்பா
கயற்கூடு கண்ணிடை யாகாசந் தீட்டுதல் கைக்கரிதே. ௭௯

அரிதிரி கைக்கு வடுவாழ் மறைசை யரன்வறுமை
பெரிதிரி கைக்கு வந்தாண்டான் மெய்ஞ்ஞானம் பிறங்குசுடர்
விரிதிரி கைக்கு வினையே னிடத்தில் விளங்கு மட்சக்
கிரிதிரி கைக்கு நிகராம் பிறப்புங் கெடுவிப்பனே. ௮௦

கெடுப்போ னகந்தையை நான்முகன் கேசவ னார்க்குமுண்டோன்
கடுப்போ னகந்தையல் பங்கில்வைத் தான்மறைக் கானுவந்தா
னடுப்போ னகந்தை யுடையான் சிலம்பினம் மானதையொப்பாய்
வடுப்போ னகந்தை மணிமுலை நின்குறை மற்றிலையே. ௮௧

மற்றலத் தேரைய மின்றிநெஞ் சேயென்ன மாயங்கொல்லோ
முற்றலத் தேரை விடுஞ்சாலிற் சங்கமுழங்கு பண்ணைப்
பொற்றலத் தேரை மறைமறைக் கானப் புனிதன்கல்லுட்
பற்றலத் தேரைக்கு மேயளந் தானெப் படிப்படியே. ௮௨

படிகந் தனையனை யான்மறைக் காடன்பொற் பாணியில்வேல்
பிடிகந் தனையரு டாதைய னாடகப் பேரவனைக்
கடிகந் தனைமுகில் காணனை யேத்தக் கருதுநெஞ்சே
விடிகந் தனைய மடவார் கலக விழிமையலே. ௮௩

மையகற் றானை முகன்றாதை மாணிக்க வாசகனை
மெய்யகற் றானை மகிழ்மறைக் காடனை வேண்டியுன்னுஞ்
செய்யகற் றானைமுக் கோலந்த ணீர்சுரஞ் சென்றனரோ
துய்யகற் றானைப் புரந்தானன் னானுந் தோகையுமே. ௮௪

தோகை யிராமன் மதன்பாண மங்கந் துளைத்தது கா
ரீகை யிராமன் விதிகற்ப மானதென் மீதிற்சற்று
மோகை யிராமன் மறந்தா ரிராவண னுட்கவென்ற
வாகை யிராமன் பணிமறைக் காடர்வந் தாரிலையே. ௮௫

வந்தித்திக் குங்கணை யுங்கொண்ட வேள்பணி மான்குழற்கா
டுந்தித்திக் குங்கனி வாயும்வெண் மூரலு மொண்குழையும்
பந்தித்திக் கும்பெறத் தோன்றிய வேதப் பதியன்பொற்றா
ளந்தித்திக் குந்தகு மென்னமன் றூடு மரன்கிரிக்கே. ௮௬

அரம்பையங் காட்டக வேதா ரணியத்த னவியச்சுக்
குரம்பையங் காட்டவல் லான்சித சித்தன் குரூஉச்சடிலச்
சிரம்பையங் காட்ட வணிந்தோ னரவிந்தச் சேவடியன்
பரம்பையங் காட்ட வெரிமுன்பஞ் சாகப் பறந்திடுமே. ௮௭

பறக்கும் பருந்துவக் குஞ்சழி யூன்முடைப் பற்றுளதா
யிறக்கும் பருந்துவக் காக்கையை நீக்கி யினிப்பொதிய
வறக்கும் பருந்து தமிழ் மறைக் காடனருளைக்கொண்டு
துறக்கும் பருந்துதித் தற்கரி தாமுத்தித் தொல்கதவே. ௮௮

கதவாயு நீரங்கி மண்காய மான கடவுளெனை
யுதவாயு மப்பனு மானவன் வேத முறைவனத்தான்
பதவாயு தக்கொடி வேடானை கீர்த்தியைப் பாடுதற்குச்
சதவாயு நாவுந்தந் தானில்லை வாணி தலைமகனே. ௮௯

மகர சலந்தர ளந்தரு வேத வனத்தன்புய
சிகர சலந்தர னுவியுண் டானடல் சேர்ந்திலங்கு
முகர சலந்தர வாலாச னுவுரி யங்கையொற்றைப்
புகர சலந்தரப் போர்த்தா யெனவினை பொன்றிடுமே. ௯௦

பொன்றுதை யம்புயத் திண்கால னஞ்சிப் புரண்டுவிழ
நின்றுதை யம்புயத் தான்மறைக் காட னிழல்வெற்பினீ
ரொன்றுதை யம்புயங் சம்வாய் விழுங்கிய தோமணித்தே
ரென்றுதை யம்புயன் மூடிய தோநின் றியம்பிடுமே. ௯௧

இயக்கோடை யாம்பன் முசுருந்த னேத்து மிறைவவண்டு
முயக்கோடை யாம்பன் மலர்மறைக் கான்முத லேசுருதிச்
சயக்கோடை யாம்பன்முத் தேயடி யேன்சட் டகம்விடுநாண்
மயக்கோடை யாம்பன் மருந்தேநின் பார்வை வழங்குதியே.

குதிக்குஞ் சிதாரிக் கட்கயற் பாவை கொழுநன் மன்றிற்
சதிக்குஞ் சிதநடத் தான்கொன்றை மாலை தவழ்குழவி
மதிக்குஞ்சி தங்கிய வேணியன் வேத வனத்தலத்தி
னுதிக்குஞ் சிதலை யெறும்பாதி பேற்றை யுரைக்கரிதே. ௯௩

உரைத்தென்ன வண்மை பரன்மறைக் கானுறை யோங்கன்முகி
னிரைத்தென்ன வன்மலி பூங்குழ லாணெஞ் செனுமிரும்பைக்
கரைத்தென்ன வன்னகைப் பூண்மார்பஞ் சேரக் கருதுபொதி
வரைத்தென்ன வன்கொடி சாடிய வேல்விழி வாணகையே.

வானண்ட ருண்டி வழங்குஞ்செவ் வாய்ச்சி மணிகறங்கு
மானண்டர் வேயிசை கேட்கப் பொருளணை வாய்கவைத்த
கானண் டளாயினி னத்தீனு முத்தினைக் காமரன்னந்
தானண்ட மென்றணைக் கும்மறைக் காட்டுறை சங்கரனே. ௯௫

சங்க மடங்கலை சூழ்மறைக்காடன் றடஞ்சிலம்பிற்
றுங்க மடங்கலை யன்னான் புரியுஞ்சொற் சூதை யெண்ணேன்
பைங்க மடங்கலை நேரும் புறவடிப் பார்வைதக்கோர்
சிங்க மடங்கலை கற்பாரென் றூர்பொற் சிலைநுதலே. ௯௬

சிலைக்கோடு மேல்வைத்தகோற்றே னுடைந்ததண் டேறல்வயற்
றலைக்கோடு வேத வனப்பெரு மான் மலைச் சங்கரிதன்
முலைக்கோடு பட்ட தழும்பான் சடில முடிமணியாங்
கலைக்கோடு வெண்பிறை யைச்செங்கை கூப்புதி கார்மயிலே

காரண னேமத் தலைவே திகைமறைக் கானப்பரி
பூரண னேமத்த மானவன் வில்லிடம் பொன்வெள்ளிமா
வாரண னேமத்த வாரணங் காத்திடு மாழிப்புவி
பாரண னேமத்த வேணியைத் தாங்கிய பால்விடையே. கூஅ

பாலம் பகவன் மயிலுரைக் கோவியற் பாவைபங்கன்
ஞாலம் பகவன் மருப்பினிற் கின்றிடு நாரணனுங்
கோலம் பகவ னவின்மறைக் காடன் குரூஉச்சடில
மேலம் பகவ னமையாண் டருளுவன் மேதகவே. கூகூ

தகர நகரமுன் னமைந் தெழுத்தர் தறுகண்முகப்
புகர னகரத் தாவேழப் போர்வையர் பொங்கனலம்
பகர நகரத்தர் வேதங்கள் பூசித்த பான்மைபெற்ற
சிகர நகரத்த ரெற்களிப் பார்முத்திச் செந்திருவே. க00

மறைசையந்தாதி யரும்பதவுரை

முற்றிற்று.

ஆக்கியோன் பெயர்.

செந்தா தியன்மணிப் பூண்புலி யூரற்குச் சேர்ந்தளித்துச்
சிந்தாத் தியாகஞ்செய் வில்லவ ராயன் றிருப்புதல்வன்
கந்தா வளந்திகழ் நல்லைச்சின் னத்தம்பி நாவலன்சீர்
அந்தாதி மாலையை வேதாட வீசற் கணிந்தனனே.